ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

திருவல்லிக்கேணி

பலசரக்கு

ஏலப்பாட்டு.

இஃது,

திருவெண்காடு.

ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

—*—

திருவொற்றியூர்.

பரசுராமமுதலியார் குமாரர்

தி-கன்னியப்பமுதலியார்

அண்டுபிரதர் அவர்களது

பரப்பிரம்ம முத்திராக்ஷர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

—*—

1894.



ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமஹாபார்த்தசாரதிப்பெருமாள்பேரில்

பலசரக்கு

கப்பல் ஏலப்பாட்டு.

—*—*—*—

ஏலேலோ குருபாதம் அம்பாள் விநாயகனே முன்னடவாய் நான்முகன்றன் சரஸ்வதியே எந்தநாவினுள்ளே வாருமம்மா சீர்மொழியும் திருவல்லிக்கேணி யெனும்புரிதனிலே வாசமாகவீற்றிருக்கும்பார்த்தசாரதியுந்தேவியுடன் வேதவல்லித்தாயார்க்கு கப்பல்காணிக்கைகள் வெகுவிதமாய்ப் பாரமுடன் சரக்குகட்டியோடிவருஞ் சம்மதிக்க.

(ஐரூர்) நாழிகையொன்றுக்கு நாநூறு கப்பல் நாடோறுந்தப்பாமல் தினம்வந்திறங்கும் சிறுடையபடித்துறைக்கு கப்பல்வருஞ்செய்தி சென்னப்பட்டணங் கோட்டை ஜனங்களெல்லாங்கேட்டு பூரித்து ஆனந்

கப்பல்வலப்பாட்டு.

சந்தோஷமாகப் புதுமைகள் பார்க்கவந்து கரைதனி லேநிற்கபாரியவர்த்தகர்கள் செட்டிகோமுட்டி பட்டணத்திலுள்ள குடியின்னஞ்சிலபேர்கள் வேணுமென் றசரக்குகள் வேணபடிகொள்ள மாட்டதனில பணங் கொணர்ந்து வந்கவர்களிங்கே போன பேர்பெற்ற சென்னைபுரியாளும் பெரியதுரைசின்னதுரை யெல்லாட்டுங்கேட்டுநாடாளுமிங்கிலீஷ் கொடிக்காரரெல்லாம் நாலாயிரஞ்செனங்கள் வந்துமேநிற்க ஓடதண்ணீரிலங்கர்பாய்ச்சி யொருபுரமாய கப்பலெல்லாங் கரைதனி லேசேர்க்க வேதவல்லிததாயார்கடாட்சத்தினாலே வேகமுடன்கப்பல்வந்து சேர்ந்துதையாசுவாமி (ஏலே லோ குருபாதம்)

பொங்கிவருங்கடலோரந்தாயார் பூமகளாஞ் சந்நிதிக்கேமங்களமாம்சரக்குகப்பல் இங்கேவந்திருக்கும் படித்துறைக்கு நிரம்பிவருஞ்சரக்குகட்டிநோபாரத்துடன் கனத்துவரும் தங்கிவரும்வழிகளிலே சற்றேதாமதங்களில்லாமல்.

(சரூர்) எங்கெங்கந்த தீவாந்திரத்திலிருந்து எண்ணிசொல்லிமுடியாத சரக்குகளைக்கொண்டு பஞ்சவர்ணக்

கப்பல்வலப்பாட்டு.

கிளிகொஞ்சும் பங்காளதேசம் சிறுசம்பா பெருசம
சிரகச் சம்பா—சிறுமணியும் பெறுமணியும் சிறுராசி
நெல்லு கொடிசம்பாமணக்கத்தைகுங்குமச்சம்பாகோ
த்தமுத்துசம்பா குடைமல்லிகைசம்பா மல்லிகைச் ச
ம்பாமணமுள்ளசம்பாபங்காளதேசத்தில் வால்நீண்ட
நெல்லு அனுமந்தசம்பாஅவலற்றசம்பா—அந்தந்தே
சத்தில் விளைந்துவரும்நெல்லு கடுகுசம்பா-மிளகுசம்
பா-கற்பூரசம்பா கன்னியரிசியுடன் கருப்புநெல்லரிசி
சோளைமழைபொழியும் நல்லமலைபாளதேசத்துள்வெ
ள்ளைநெல்விளையுந் தும்பைப்பூசம்பா சசியமாபர்வதத்
தில் விளைந்துவருஞ்சம்பா சமுத்திரத்தில் விளைந்துவ
ருஞ்சடைசம்பாநெல்லு சாதகோதாவரியில் விளைந்து
வருஞ்சம்பா சதுரானதேசத்தில் விளைந்துவரும்நெல்
லு காசிதேசததில் விளைந்துவருஞ்சம்பா கன்னியாகு
மரியில் விளைந்துவரும்நெல்லு ஸ்ரீரங்கநாதருக்கு விளை
ந்துவரும்நெல்லு-திருவரங்கநாயகிக்குவிளைந்துவருஞ்
சம்பா செம்பாளைபூம்பாளைககதாசியரிசிகல்லுண்டை
நெல்லுண்டை கார்போகத்தரிசி கட்டை யரிசியுடன்
கப்பலுள்ளதிணுசு மலைதுவரைசிறுதுவரை கடலைபய
ர்உளுந்து-மற்றுமந்தகோதுமை நவதானிய சோளம்

கப்பல்வலப்பாட்டு.

மஞ்சள்பொடிமஞ்சள் காமுள்ளமஞ்சள் கப்பமஞ்சள்சாயமஞ்சள் பங்காளமஞ்சள் மலைதேன்கள் சிறுதேன்கள் கொடிதேன்கணல்ல நாவுக்கினைசந்ததொருதீவராட்சிகளும்—தேன்பாகுமணப்பாகு சீமை கற்கண்டு சீனிகற்கண்டையோடு சேர்ந்தநல்லவெல்லம் ஈச்சம் பெல்லம் பனங்கற்கண்டுஉள்ளிவெங்காயம் காச்சிருக்கும் புளிச்சக்கை நீடிமுதனுக்கள் களிப்பாக்குசிறுபாக்குகலயாணபாக்கு கற்றகாப்புசில்வத்திகாட்டுக்கொம்பாக்கு கம்மாறுகச்சோடு வெற்றிலைகள்நல்ல கடல்முத்து சுண்ணம்பு காமுள்ளபுகையிலை-சீரகம்-பெருங்காயம் சதகுப்பைஓமம் சேர்ந்ததொருவெந்தயமும் கொத்துமல்லிவிரையும் கிருகுகள்மிளகுகள் கடுச்சிக்காயேலம் கடுக்காய்பூசிறுலவங்கப்பட்டையொடு பதரிசுக்குதிப்பிலிமோடி செவியமொடுகோஷ்டம் செடாமாஞ்சி அதிமதுரம்கண்டுபாரங்கி சிற்றரத்தைசிறுதேக்கு செங்தூரம் தும்பராஷ்டச்சிறுநாவல்பூவோடு குரோசாணிவோமம் மற்றுமந்தவாய்விளங்க மராட்டியமொடு பாங்கிச்சக்கைகருஞ்சிரகம்அதிமதுரம்லவங்கப்பூதாளிசப்பத்திரி அக்காரகாரங்கள்கடுகுரோகணியும் கற்பூர தினுசுகள் கட்டிசாப்பிராணி காமுடன்மெழுகுகள்கட்டிகுங்கிலியம் வெண்காரம்புளிகாரம் படிகாரம்வச்சர

ரம் இந்துப்புபாலுப்பு சயிந்துப்புலவணங்கள் துத்தி
நாகத்தோடு செந்தூரப்பச்சை சித்திரங்கள்எழுதநல்
ல அரிதாரஙீலம் ஏலக்காய்சாதிக்காய் வால்மிளகுலவ
ங்கம் ஏற்றமுள்ளசாதிக்காய்பட்டை குங்குமப்பூகஸ்
தூரிகோரோசனங்களும்நல்லகுமுகுமென்றுவர்ச்சிக்
கும் பச்சைகற்பூரம்சந்தனகட்டையின்சட்டங்கள்—பு
னுகு சலவைப்பன்னீர்கள் கதம்பபொடிஅத்தர் பச்சி
லைக்கிச்சிலி கிழங்குகள்பில்லைபரிமளம்வீசிவரும் கஸ்
தூரிமஞ்சள் சந்தனதயிலங்கள் சாம்பிராணிவத்தி சம்
பங்கித்தயிலங்கள் கிலெண்ணைபிப்பாய் ஸ்ரீகந்தம் அ
கில்கட்டை தேவதாரிகள் தீவிலுள்ளவஸ்துகள் அபு
ரூபவஸ்து மலைவேர்கள்மலையாளசஞ்சீவிநல்லநிலவே
ப்புவிஷமுஷ்டி வேர்புடன்சூரணம் செத்தவரைப் பி
ழைப்பிக்குஞ்சஞ்சீவிமருந்து வெட்டுண்டகாயங்கள்ஒ
ட்டநல்லமருந்து வாழாதபெண்களுக்கு வாழ்வுதருமரு
ருந்து மைந்தரில்லாமலடி பிள்ளைதருமருந்து கூடாத
ஆணும்பெண்ணும் கூட்டிவைக்குமருந்து குற்றங்கள்
குறைதீர்க்கும் குணமுள்ளமருந்து ஆணுடனே பெ
ண்பிரிந்து அலைந்துகெட்டபேரை ஆசையுடன் கூட்டி
வைக்கும் அந்தரங்கமருந்து தேசாந்திரம்ஓடிதிகைகெ

ட்டபோன சீக்கிரமாகொண்டுவந்துசேர்க்குநல்ல மரு
ந்து இத்தனைமருந்துவகைஇனிசொன்னதினுசு இன்ன
மின்னம்சரக்குவகை பேர்சொல்லக்கேளும் பேர்சொ
ல்லாசரக்குவகை ஆயிரங்கோடி. பேர்சொல்லுஞ்சரக்கு
வகைபதினாயிரங்கோடி இந்தனைசரக்குவகையெடுத்து
மேகட்டி இசையுடனேகப்பலெல்லாமொருவழியாய்
த்தள்ளி பத்திரமாய் வழிகளிலே தண்ணி செல்லாந்
தாண்டி பலசரக்கு கப்பல்வந்து சேர்ந்ததையா சுவா
மி—ஏலேலேலோ.

இன்னமின்னம்சரக்குவகை நல்லபெற்றமுள்ள
கப்பலிலே யெண்ணிசொல்லிமுடியாது கொஞ்சம் சு
ட்சமுடன்சொல்லுகிறேன் கப்பல்வந்த தினுசுகளெ
ம்மால்கணக்குசொல்லிமுடியாது.

(சருர்)பட்டுகள்தாபித பச்சைபட்டுமுகமல்பங்
காளதேசத்து பர்க்களாதுஞ்சா காதுப்பட்டிசலவை
யுருமால் சரிகைநெபதபுடவைகள் ச [illegible]புள்ளதோம்
பு மெத்தைககுதகுந்தநல்ல [illegible]ல்பட்டுஜலர் விதவித
மாரவைசல்லாவெண்பட்டு சேலைமேலுக்கழகானதொ
ரு மாதுளம்பூபட்டு மக்காலி வென்பட்டு மகமையில்கா

ப்பு பங்காளபட்டுடன்பஞ்சவர்னச்சேலை அச்சமாய் க
ட்டநல்லபச்சைபிதாமபாம் ஆத்தூருபவழகாடு பாக்கு
வர்னச்சேலை ஐதராபாக்கத்தில் தாட்டிபத்திரிச்சேலை
மிஞ்சிமுடுக்கானதொரு செஞ்சத்துசேலை மேலானமே
ற்கத்தில் சேலத்துசேலை கெண்டுபோட்டசேலை கொ
ண்டதொருகோடி கட்டாயபட்டுடன் பட்டுவர்னச்சே
லை மேலானசவுளிகள் யிரட்டைக்குலிக்கி கண்டதொ
ருபுலியூரில்கொள்ளும்நல்லசேலை நிலையங்கிபாகைகள்
நீண்டிருக்குங்குல்லா நிசாருடன்பாவாடை யுருமாலை
சவக்கம் நடுக்கட்டுரவிக்கைகள் நாலுவிதம்சீட்டி நார்
மடியும்மடிசஞ்சி தேர்த்தைக்குங்கித்தான் ஜார்சிங்கு
சகலாத்து சன்னதாவலையல் கட்டமுடன்துப்பட்டி ப
ங்காளரேக்கு பார்வைக்குமோங்க்குஞ்சிமைநூல்பட்டு
பட்டணத்துபெண்களுக்கு வாங்கநல்லபுடவை முத்
துகள்ரத்தினகெம்புமோகனமாலை முத்துசாமாலை நற்
பவழஞ்சாதிலிங்கம் நாலுவிதப்பச்சை நவரத்தினகல்
லுகள் நாகரீகாவிக்கை வச்சிரங்கள்வைடூரியம மாணி
க்கலீலம் மஞ்சணிறம்கோமேதகம் புட்பராகங்கள் மர
கதவிலை தருப்புகள்மார்ந்தாளிபச்சைமற்றுமந்த கப்ப
லிமேலமுத்துவந்ததினுசுகோர்வை கொலுசுகளும் கை

யிலிடுமுத்து கோடானகோடி கல்லிழைத்தபாட்டில் அடுக்குவளைபலதோள்வளையல் அதுகுண்டுவாங்கி அழகானபாசிபந்து கையிலிடுங்கொலுசுகண்டசரம்சரப்பளிகள் கடல்முத்துமாலை கல்லிழைத்தபட்டயங் கழுத்திலிடுங்கெண்டி ஆரங்கள்பதக்கங்கள் அண்டிகைகள்நல்ல அதுகளுக்குமேலான மகரகண்டிகைகள் காதுகள் நிறைந்திருக்கும் கத்திரிப்பாவலிகள்கம்மலிடுஞ்சிமிக்கிசரம் காதுக்கிசைவாளி ஆணிமுத்துகல்லிழைத்த அக்கிமூக்குக்கம்பி அழகானபுலாக்கு அன்னமூக்குத்திகலிக்கத்தூரா கல்லிழைத்த சுட்டியோடுபட்டம் காதுக்குநேரான திருநெற்றிசுட்டி சந்திரபிறை சூரியபிறை தலைநிறைந்தசாமான் தளதளெனகாந்தியுடன் தங்கஒட்டியாணம் பாதசரம்சுருள் கொலுசுசிலம்புதண்டைபாட்டில் பத்துவிரல்மோதிரங்கள்மிஞ்சியுடன்மெட்டு காதுக்குசவுளிகள் கல்லிழைத்தசோடிகண்டசரம் பதக்கங்கள் முத்துவைடூரியம் கையிலிடும்மோதிரங்கள் முத்திரைசீராயும் கல்லிழைத்தபெருங்கடுக்கன் தங்கவளை அரஞாமார்னிறைந்த பொன்னூல்மகரகுண்டலங்கள் மண்டலத்துஜனங்களும் வாங்கநல்லநகைகள் ஆபரணவகையெல்லாம் மணியணியாய்வைத்து யதழ்

கேற்றபெட்டிகள் பூட்டுகள்சாவிமோரா விராகன்கள்
சாணாக்காசுமேலான சீர்மையார்முத்திரைகள்ரூபாஆ
திவிலேயுண்டான ஸ்ரீராமர்மேடை அதுகளைச்சார்ந்த
தொருகாசுமணந்துட்டு அரக்குமுத்திரைகள் தைத்து
அடையாளங்கட்டி யடையாளமாகவே காசுபணமெல்
லாம் யந்தந்தவிடத்தில் பத்திரங்கள்பண்ணி சிறுமுத்
துபெருமுத்து சிறுராசிமுதது சூரத்தில்விளைந்தவரு
ஞ் சுண்டக்காய்முத்து பருத்தமுத்துபெருத்தமுத்து
பவழநிறமுத்து பம்பாயிசீமையிலே விளைந்துவருமு
த்து கடைந்தமுத்து உருண்டமுத்து கட்டாணி முத்
து கருங்கடலில்விளைந்துவருங் காந்தியுள்ளமுத்து வா
ணிமுத்து நீலமுத்து வார்கட்டைமுத்து வையகத்து
ஜெனங்கள் வாங்கநல்லமுத்து ஒட்டுமுத்து தந்தமுத்
து சுட்டிமுத்துநல்ல ஒப்பில்லாமாணிக்கசிவாத்தினங்
கள் கோவர்த்தனகிரியில் வாங்கிவந்தமுத்து கோபா
லகிருஷ்ணருககு சாத்தநல்லமுத்து அயோத்தியாபுரி
யில் வாங்கிவந்தமுத்து யபிராமிலட்சுமணருக்கு சாத்
தநல்லமுத்து காசிதேசத்தில்வாங்கிவநதமுத்து கண
மானவர்த்தகர்கள் விலைமதித்தமுத்து பாதபுரி சீமை
யிலேவாரிவந்தவச்சிரம்பலமான வர்த்தகர்கள் விலைம

திக்கவச்சிரம் குடகுதேசத்தில் வாங்கிவந்த செம்பு கோடிசனவர்த்தகர்கள் விலைமதிக்கசெம்பு டில்லிதேச த்தில் வாங்கிவந்தபச்சை நாலுதேசத்தில் வாங்கிவந்த ரத்தினம் நகர்சென்னபட்டணதுரைகள் வந்திறங் கதங்கக்கட்டி வெள்ளிகட்டிதனித்தனிபாய்வாவேதா ம்பரமவெங்கலங்கள் பித்தளைதூராக்கள் இரும்புசட்ட ம்ரயக்கம்பி பெருங்கம்பிநல்ல இதுகளைச்சார்ந்தசெதா ரு தண்டவாளங்கள் சீரமைமண்சாடிகள் சின்ன சின் னகுப்பி சீசாக்கள்வளையோடு பீங்கான்கள் கிண்ணிதி ராவகம்பிராந்திகள் சாராயப்பீப்பாய் தனித் தனியா யந்த இடங்களிலேவைத்துபச்சைகள்நீலம்குளேப்பு கண்ணாடிபச்சையில் பெரிதானபன்னீருகுப்பி கண்ணா டிகதவுகள்கைபெட்டிமேஜை கவுசிகள்குர்ச்சிகள்கட்டி லொடுதொட்டில்மெத்தைகள்திண்டுகள்பில்லைத்தலைக் காணி விதவிதமாமேற்கட்டு யேருந்துரைசாமான்மெ ழுகுசீலைகூடார மேக்குகள்வேம்பு விதவிதமாய்சீமை நயக்குல்லாக்கள் சொக்காய் அறக்குவத்தி மெழுக்கு வற்றிஅகற்கேற்ற பீடங்கள்அலங்கார கூடங்கள்மெ ழுகுவத்திராந்தல்கனகவிளக்குதிகோடிகாந்தியுள்ளவி ளக்கு கண்ணுக்குஅழகான ரசகுண்டுவரிசை சதிருக்

குஅழகான சாயபொம்மைகளும்சாய்ந்திருக்கும்திண்
டுகள் சரிகைமேற்கட்டுங்கமோடுவெள்ளிகள்தட்டுதூ
ம்பாளம் சதுருக்கு ஏத்தவொரு சாதிக்காய்பத்ரிதகு
மானவால்மிளதல்வங்கமொடு பெட்டிவெற்றிலைமடித்
துகோர்க்கும்வெள்ளியிர்க்குகளும் விதவிதமாய்ப்பன்
னீருகுப்பியொடுகிண்ணி பட்டுபாய்பிரப்பம்பா படு
த்திருக்கும பாலிப்பாபட்டணத்து துணைகளுக்குகெ
ட்டி தாழம்பாய்பட்டுரத்தனக்கம்பளி சளிசோடுசமு
க்காளப் பந்தலுக்குயெற்றவொரு மட்டபிரப்பம்பாய்
கண்ணாடிகாம்பிராக்கள் கட்டில்கள்சோப்பா காட்டினி
லையுள்ள கலைமான்கள்கொம்பு கறுத்திருக்குஞ்சவரி ந
ல்லவெள்ளைசாமரங்கள் கிருஷ்ணசலப்பெட்டி புலித்
தோல்கள்நல்ல உட்கார்ந்துசெபம்பண்ணும்சித்திராச
னங்கள்பட்டுகுடைவெள்ளிகுடை பச்சைகுடை நீல
ம்பவழகுடைமுத்துகுடை தங்ககுடை வெள்ளைவீசி
வரும் பாவாடைவெள்ளித்தடிகள் வேடிக்கையாகவே
கப்பல்வாவே தாளிபனைஓலைகள் சீமைகடுதாசி பேனு
க்கள் யிங்கிபுட்டி பிரப்பநதட்டு பீங்கான் கோழிகள்
செவுகள்சுவடிபலகைகள் சிறுராசிபெருராசி ஆடும்ப
ல்கைக்கு சங்குகள்பாலாடை—சாக்குபித்தளைகள் சட்

டமாய்க்கப்பலிலேதிட்டமாய்க்கட்டி அஷ்ட லட்சுமி யொழியும் ஆனைக்கப்பல் அளவற்ற பாக்யங்கள் குறைவற்றசெல்வம் நித்தியலட்சுமிபொழியுந் திருவல்லிக்கேணி நினைத்தவரங்கொடுப்பாளந்த வேதவல்லித்தாயார் இஷ்டமுள்ள லட்சுமிகடாட்சத்தினாலே ஏற்றமுள்ளகப்பல் வந்துசேர்ந்துதையா சுவாமி (ஏலேலோ) ௯

தார்குழலாள்கப்பலிலே நல்லசஞ்சீவி மருந்துவகைவையகத்து சனங்களுக்குநல்லவியாதி தீருமருந்துவகைபூமியிலே சனங்களுக்கு நல்லபொன்னுக்கும் விலைதினுசு.

(சளுர்) போனரசனாதம்பச்சிலைகள் தினுசுபெருவியாதிரோக மறுஞ்சஞ்சீவிமருந்து க்ஷயரோகந்திமிர்வாயுதனுர்வாயுரோகம் கிரிமிமேகம்காமாலைமார்நோவுகுன்மம் கண்நுறுடுசெவிடுகள் கால்மொண்டி முடங்கள் கண்காசபடலங்கள் மகத்தானரோகம் மாதர்வியாதிகள் தீர்க்கநல்லமருந்து திக்குதெரியாதவர்திசைக்கெட்டபேர்க்குதிவ்யஞ்சனம்நல்ல சீமைதைலங்கள் தேசத்துசனங்களுக்குசெயமுள்ளமருந்து தோடமெல்லாஞ்சாந்தமாய் அழகுதருமருந்து உலகத்துஜனங்களுக்

குஉபகாரமருந்துநோநாறும்வியாதிகள்வாராதமருந்து
மனிதர்க்குள் சீமையில் சொர்ணை கெட்டபேர்க்கு மத
னகாமேசுரம் அவிழ்தகஞ்சாக்கள் குல்கந்து வில்வாதி
லேகியந்தானும் கிழ்நாடுபேர்பெற்ற மருந்துவகை தி
னுசெல்லாம் வகைவகையாய்வைத்து மற்றுமந்த கப்
பலிலேஆளமட்டுஞ்சாமான் கதவுகுழையிரும்பு சட்
டம்கைப்பிடிகள் வலையம்கட்டிலுக்குந்தொட்டிலுக்கு
மூலசட்டசாமான் தலைக்கடைக்கதவுகள் கைப்பிடிக்கு
ங்குழைகள் வைரத்தூண் கம்பளங்கள் வெண்கலப்பட்ட
ங்கள் சாரங்கள் தளங்கள் சங்கிலிகள் குப்பிதாவர்ரபெ
ட்டிக்குருடுப்பூட்டுசாவிகாடைவிளக்குகள் கைவிளக்கு
நல்லகலியாணப் பந்தலுக்குயேற்ற குத்துவிளக்குகள்
தூங்காவிளக்குகள் தூங்குமணிகொலுசு தொட்டிலுக்குச
ங்கிலிகள் தேக்சாசகளாத்துடுப்புமண்ணுலுருவானவா
னும்காடிமண்வெட்டிகள்நல்லவெட்டுக்குத்தாலிகோடா
லிபிஸ்தோல் துபாக்கிகள்பீரங்கிகுண்டு பல்லயம் ஈட்
டிகள் பாங்குகட்டாரிகெடியாரம்மணிக்கம்பம் குப்பி
ணிகள்பாறு கணக்குவகைசொல்ல இலட்சம்பிரிதிகள்
ஆயுதங்கத்திகள் அலையான்துருப்பு ஆழத்துமீன்தெரி
ய்நச்சுகுழல்கொப்பு ஆனைகள்குதிரைகள் ஆயிரங் கா

லாள்ஆந்தோணிமேனுக்கள் பல்லாட்குடோலி கோரத
ங்கள்கூட்டு பண்டிசக்காரங்கள் சட்டம்குதிரைநட்டுசா
ட்டுகண்டிகைகளோட மான்களொடுமயிலுமாடப்புரு
வுட்மைனுக்கள்பாத்துக்கள்பஞ்சவர்ணகிளிகள்கரக்கநல்
லபசுக்களோடெருமை பச்சைவெண்ணெய்கடைந்தெ
டுக்க மாங்களொடுமற்றும் சீமையெலிபெருச்சாளிகள்
சிறுத்தையொடுமுயல்கள் தேவாங்குகளுங்குரங்கு பு
னுகுபூனைகளும் செந்நாய்காடி சிவிங்குகொண்முயலு
ம் சீனாநாய்வேட்டைநாய் இன்னமின்ன சாதி கடம்
பைகள்உடும்புகள் கோவேறுகழுதை கண்ணிக்குனிக
ரான நீர்மணிநைசாதி விதவிதமாய்கப்பலில் வேடிக்
கையாகவே வேகமுடன்கப்பலிலே விசையோட்டம்
வரவே சிறுமீன்கள் பெறுமீன்களெல்லாம் வந்தங்கே
னிற்க தவட்டுமாகலங்கமே சமைத்த கொழுகட்டை
தாமதங்களில்லாமல்எடுத்துமுன்போட்டு அலைகடல்வ
ழியெல்லாம் ஒருநொடியில்தாண்டி ஆனந்தகப்பல் வ
ந்து சேர்ந்ததையாசாமி (ஏலேலோ) ௪

சங்களமாபருவத்தில் நல்லசந்தனத்தால்சேர்ந்த
ப்பல் மண்டலத்துசனங்களுக்கு நல்ல மாளிகைக்கு
மானுசபட்டணத்து சனங்களுக்குநல்ல பலவிதமாய்
லதினுசு.

(சரு) சதுர்கட்குந் திரான எலுமிச்சம்பழங்கள்
திநார்த்தப்பழச்சர்க்கரையனுசி செவ்வாழைப்ப

ழங்கள்சேர்ந்தாஸ்தாளிசெவ்விளநீர் சீர்மையத்திப் ப
ழங்கள் கிளிமூக்குமாம்பழம் மணிபிலாக்கிச்சிலிவகை
யாணமாதளம்பழங்களொடு தினுசுசீத்தாப்பலாப்பழ
ம்சொகுசானசீனிசெடி நார்த்தை கொடிநாரத்தை சீ
மைகிச்சிலிகள் கொய்யாப்பழம் நல்லகொத்து திராட்
சிபழம் கொடிதனில்விட்டுவரும் கட்டுமாம்பழங்கள்
பேரிச்சம்பழம் நல்லபருப்புகற்கண்டு பேரானைக்குரி
காய்களொடுதினுசு பட்டாணிமுந்திரிப்பரிப்புகள் தி
னுசு பழவகைகள்தினுசெல்லாம் விதவிதமாய்வைத்து
பங்காளகப்பலின்மேலே பணியாரதினுசும் கொட்டுப்பால
மேருசாம் தேன்குழல்பூரி துள்ளுமாந்த அதிரசம் பா
ற்குழம்பு பட்டுசோமாசியென்பது பேணியதுவாகும்
தின்னும்வகைபலகார மின்னமின்னக்கொண்டு சங்கி
ண்டபீமனுக்கு சற்கரைமிட்டாயுசாரமுள்ள பாலன்
னம் தயிர்வெண்ணெயாலும் புளியோதை ததியன்னம்
பொங்கல்வடை தோசைபோகமாயடிசில்செய்யும் இ
ட்டிலிகள்நல்ல சக்கரான்னங்களோடு முனைசோனையு
ண்ட அக்காரவடிசில்க்கள் பங்காளபாத்து வேதவல்லி
த்தாயார் அடிசில்செய்யும்வகையை பணியார மின்ன
தென்றுகணக்கிடப்போமோ பாத்தசாரதிதேவிஅடி

சில்செய்யும்வகையை பணியாரவகை தினுசுவகைகள்
பரிமளங்கள்வீசிவரும் புஷ்பவிதசாதி சம்பங்கிபுஷ்ப
ங்கள் சாதிமல்லிகைகள்சாங்கமேளாடுமாலைகட்டி குரு
வேர்கள்தவனம் பன்னீருபுஷ்பங்கள்பந்திபுஷ்பங்கள்
பட்டுசாமந்திகள் பலவிதங்கள் சாதிசெண்பகப்பூ நல்
லசெங்கழுநீராம் பல்சிறுசெண்பகத்தோடு சேர்ந்தவ
னமல்லி நீலவர்னப்புஷ்பங்கள் நீண்டவிருவாட்சி மே
லான கபப்புன்னை முல்லைசெந்தாழை புஷ்பவகைஆயி
ரங்கள் பொட்டணங்கள்கட்டிபேர்பெற்ற கப்பலிலே
இன்னமின்ன தினுசுகள் தேக்குநல்தேக்கு காட்டிலுள்
ளமரங்கள் கரிவோடுஇருவோடு கருப்புமாஞ்சாதிவெ
ண்தேக்கு பூந்தேக்கு வெட்பாலைமரங்கள் சிறுவேங்
கைபெறுவேங்கை சீமைபனமரங்கள் சேர்ந்தகொரு
வயிரங்களானபட்டை நல்மச்சு கட்டுமாளிகைக்கு அ
ச்சுமட்டம்பலகை மதனகால்புள்ளிசட்டம் மாதிரப்ப
லகைகுதிரைப்பட்டைக்குருவிக்கால் குத்துக்கால்சட்ட
ம் கூடத்தூக்கம்பங்கள் சாங்கமொடுதூலம்வெழல் க
ட்டுக்கானகொருவாசற்கால்கதவு மாளிகைக்குநல்லவ
கையாய்மரங்கள் ஈட்டிகள்நல்வாட்சுக்கள் பலஆணைக்கத
வு கீழ்மெத்தைமேல்மெத்தை தாங்குநல்லசாங்கள். அ

லமாரக்கதவுகள் ஆள்களுக்குமணைகள் அதிகான விசு ப்பலகை நாற்காலிமணைகள்மாங்கள் வகைவகையாய் வைத்து மகாகனமாய்கப்பலிலேவாத்தியங்கள்கோஷ் டம் முகவீணைநாகசாம்விருதுகள்பேரிமேளமொடுதா ளங்கள் சின்னங்கள்தாளமொடுமத்தளம் தருமவாத்தி யங்கள் இதுகளுக்குமேலானகிடுகிடுவாத்தியங்கள் கா ளாஞ்சிதுத்தரி கனத்ததப்பட்டை பிள்ளாங்குழல்தா ளம் பிட்டில்வாத்தியங்கள் பெருங்காளைஎக்காளை சா ரங்கிவாத்தியம் டாம்புநாகச்சுரம் பதினெட்டுவாத்திய ம் பாகவதகோஷ்டங்கள் சங்கீதகீர்த்தனம்வீணைபொ டுசின்னங்கள் வேதாந்தவேதியர்கள் தாம்தாமென்று கப்பலிலே சட்டமுடன்வாவே அதிர்வேட்டு கில்புரு சு ஆகாசபாணம் அழகானமத்தாப்பு ஐந்துதலைபாண ம் பொரிபாணம்வெடிபாணம் இடிபாணவித்தை புஷ் பபாணம்நல்லகப்பல் பாணங்கள்சுழல்பாணம் உழல் பாணம்சீறிவரும்பாணம் சீமையில்செய்துவரும் பல விதபாணங்கள் கம்பபாணம் நல்லகைகல்விடும்பாணம் காந்தியுள்ளநட்சத்திரபாணங்கள் நினுசு நீலவர்ணபா ணமொடு சூரியபாணங்கள் ரீரீமெனப்பேசிவரும்தலை லைபாணங்கள் பாணவகைகினுசெல்லாம் பத்திரமாய் வைத்துபாங்கானகப்பலிலே பலதேசச்சாக்கு கொச் சிதேசம் நல்லகுடகுதேசம் கோசில்புராதங்கள்கோபு ரங்கள் லக்கணங்கள்கற்நாடதேசம் காஞ்சிபுரம்நல்ல கா

வேரிதீரம் கண்ணூறுபாயும் நல்லசோழதேசங்கள்மலை யாளமொடுமதுரைதெற்குதேசங்கள்தஞ்சையொடுதி ருநல்வேலியொடு சீமைமண்டலங்கள் துண்டாநகரங்க ள்தேசங்குற்றலக்குறளுடு கும்பகோணதேசம் கோ தாவரிதீரங்கொண்டவெட்டிசீமைவபாளம்நேபாளங்கா ளதேசம்வாய்சொல்லுதெரியாத மாறுபாடிதேசம் இ ராச்சியத்தில்செழிப்புள்ளகுருதேசம் நடுச்சோழ மண்டலம் நாகரீகக்காஞ்சி அங்கதேசம் நல்லவங்கதே சங்கள் அதுகளுக்குமேலான இன்னமுண்டுதேசம்கா சிதேசநல்லகலிங்கதேசங்கள் கண்ணூறுபாரிநல்லகலக் கத்தாசீமை டில்லிதேசம் நல்லசிந்துதேசங்கள் திசகு தெரியாதகொரு ராணிதேசங்கள் துவாரகப்புரி நல்ல கேதாரமும் வாரணகுருக்ஷேத்திரவடமதுரை பத்தி ரங்கரோந்தரி நல்லகண்டசோதீரம் கீழ்நாடுமேலநாடு தென்னாடுதேசம் பப்பாதேசத்தில் சரக்குகள் கொண்டு திக்குதிக்காய் கப்பலெல்லாம் ஒருவழியாய்ச் சேர்ந்து ஸ்ரீராமஜெயமென்றுஎழுப்பியேகப்பல் துடுப்புகள் நா ட்டியவாளஜலங்களை யொதுக்கி சீர்பொழியுங்கப்பல்வ ருஞ்செய்தியைக்கேட்டு திக்குதிக்குகள் தோறும்வே ட்டுகள்போட்டு சிங்ககொடிகட்டிசிங்காரமாகவேஜெ யமுள்ளகப்பல்வந்துசேர்ந்ததையா சுவாமி. (ஏலே)

உலகமெல்லாம்பெற்றெடுத்த அம்பாள் உத்தமி யாள்பதிணியே மகிமையுடன்தேசமெல்லாம்வந்தரு ளுங்கப்பலிலே.

(சரூர்) மலையாளங்கோங்குடன் நிலைசேரு முடலேலை குருகளத்தூரு வந்தேமகிழ்ந்து கனமானகோயிலடியிளங்காடுநேரேகண்டியூர் திருக்காடுபள்ளி செம்பலகை கோலமுள்ளதிருவையாறு திருத்தஞர் துறைகொஞ்சும் பசுமலைநிர்கோதில்தஞ்சைநகர்கண்டு தன்னவன்மைக்காவல் உண்மையைப்பார்த்துதாணுமாய்பாய்மரம் மூன்றுபதிநூறு நன்மையைமன்றுந்தேநுடல்சினிக் கலப்புநற்பமுடன்சொற்பமாய் சற்பமாய்ப்பாரு தந்திரமானல்ல துப்பாக்கியிட்டிசிராய் நடுக்கட்டுசொருசுடனேகட்டி தூங்குமஞ்சப்பாமுடன் கட்டிஞர்தாவி அந்தந்ததேசதனுக்கதிபதிகளாகி இஷ்டாங்கமாககொண்டு சாஷ்டாங்கமாய் வரச்சே (சுருக்கச்சொல்) பந்தியுடனே ஊலாத்து இங்கிலீஷ்பிராஞ்சுவேலாட்டு அரைநாளைப்பிட்டு நீரின்மேனெருப்புகொண்டேபணிந்ததொரு பீரங்கிதீர்ந்துகுமுதமுடன் கப்பலிது சமுகநிறைகண்டுதொண்டரெல்லாப்புகழும் வேதவல்லித்தாயார் துரிதமுடன்கப்பலிதோ தப்பாமல் வருகுதப்பா—ஏலேலோ.

அதிபதியாள்அன்னக்கொடி அம்பாள்தருமநிதி புண்ணியவதிஅம்பாள் கப்பல் கடலோட்டம் தத்தையாஅரைநொடியில் வருகுதிங்கே.

(சரூர்) அந்திபேசோழமண்டலமது கடந்து அங்
ந்ததேவஸ்தலங்க ளதுகண்டு கனமுள்ள மழைபொ
ழியும்அகாறுமாதம் கனத்ததொருநெல்விளையும்மற்
றுமுள்ளசீமை அவ்வூரில்கப்பலிது அனந்தமாக அன்பு
டனேசுந்தியல்லோவல்லதுறை தாண்டி இருகாதுகொ
ப்பு இரட்டைஒட்டியாணம் இலட்சம்பொன் பெற்ற
தொருபச்சைவடங் கொண்டுவந்தம்மனுக்கு கொடுத்
தேபணிந்துகோலமுள்ளகப்பலுக்கு மேலும்வழி கா
ட்டிசீலமுள்ளகப்பலிது வழிகளெல்லாந் தாண்டி செ
ன்னப்பட்டண துறைவந்து சேர்ந்ததையா சுவாமி.
ஏலேலேலா.

உத்தமியாள்வேதவல்லி பத்தினியாள்கப்பலிது
சித்தமுள்ளபட்டணத்தில்சேர்ந்ததென்றுதான்பாட

(சரூர்) உலகமாதாவே உத்ததுகாமாட்சிஉமை
யவள் தன்னருள் உத்தாரம்பெற்று அமையுமிந்தகப்ப
லுக்குசமையமதுபார்த்து ஆகாரங்கண்டெடுத்து அடி
த்தட்டில்சேர்த்து ஸ்ரீகாரங்கண்டெடுத்துசிக்கத்திருப்பி
ஊகாரங்கண்டெடுத்து கப்பிகயற்கட்டி நமசிவாயங்
கொண்டுலங்கூரம்பாய்ச்சி நாலுவேதத்தாலே பீரங்கி
யேற்றிஅஷ்டாட்சரத்தாலேகாற்றுகளும்பாய அம்ம
னுடகப்பலிது விஸ்தாரமாக அன்பாகக்கணபதியை மு
ன்பாகவைத்து அந்தமுடன்கப்பல்வந்து சேர்ந்ததை
யாசுவாமி (ஏலேலேலா)

கப்பலென்றால்கப்பலிது நல்லகனமுடைய கப்ப லிதுகப்பல்வரும்பொழுததனால் ஜலங்கள் கரைபுரண்டு குமிளமிடும்இருகரையும் நீர்பொருந்தித்தையா ஏகஜ லமைவழிந்திடுமாம் வேதவல்லியதுவறிந்து அம்மங்கா வேரியுச்சரித்தாள்.

(சரூர்) காவேறிதானறிந்து வேதவல்லித்தாய்மேல் கடாட்சம்வைத்து கப்பல்தனை துறைகொணர்ந்து சேர் க்ககரைபுரண்டு காவேரிவெகுவெள்ளம்வரவே அம்ம னுடன்தன்மகிமை ஆரறிவாரென்று ஆகிரங்கர் சந்நிதி க்குப்பின்பாகவேதான் அலைவந்துமோதவேகரை தனி லேயொதுக்கி உத்தரபாரிசம் ஒருபக்கந்திருப்பி ஓங் காரமாகவே உருண்டமணல்வாரிசத்தமிட்டுத்தகத்தளி த்துதான்புரண்டுகப்பல் சதாகாலம்அம்மனைசிந்தைத்த னிலெண்ணி வேதவல்லித்தாயாரை தியானமது பண் ணி வேகமுடன்இங்குவந்த கப்பலிதுகண்டீர். (ஏலே)

வாழியவேவாழியவே ரத்னமகமேருவாழியவே ஈஸ்வரரும்பார்வதியும் தத்தையா இன்பமுடன் வாழி யவேமகாவிஷ்ணுலட்சுமியும் கோவிந்தமண்டலத்தில் வாழியவே பிர்மாவும்சரஸ்வதியும்தத்தையாபூமிதனி ல் வாழியவே.

(சரூர்) தேவேந்திராணிந்திராணி தேவர்களும்வா ழ்திறமுள்ளமுனிவர்களும்சித்தர்களும்வாழிமுப்பத்

துமுக்கோடிதேவர்களும்வாழி முதலானநாதருங்கிம்
புடருர்வாழி நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகளுமேவாழி
நலமுள்ளகருடகாந்தருவர்களும்வாழி விக்கினவிநாய
கரும்நித்தமிகவாழி வேலவரும்பத்தினிக ளிருவர்களு
ம்வாழி ஸ்ரீரங்கநாயகரும்ரங்கநாயகியுஞ்சிவகாருண்யமா
னபார்த்தசாரதியும் சீரானவேதவல்லித்தாயாரும்வா
ழி மேலானசென்னைபுரிஆளுகின்றதுரைகள்மென்மே
லும்எந்நாளும்வாழி மிகவாழி சுப்ரீங்கோட்டிலுள்ள
துரைகளெல்லாம்வாழி துருப்பிடித்துவழக்கெடுக்கும்எ
ல்லிட்டும்வாழி இன்னஞ்சிலதேசங்களை ஆளுகின்றராச
ர் இணையில்லாசெல்வங்கள் பெற்றுமவர்வாழி சிலமுள்
ளகப்பல்கவிகற்றவர்கள் கேட்டோர் சிறப்பாய்ப்படிப்
பேர்கள் அச்சிலிடுவித்தோர் செயம்பெற்றுவாழிமி
கவாழி.

பார்த்தசாரதிப் பெருமாள் பேரில்

பலசரக்கு ஏலப்பாட்டு

முற்றிற்று.